அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல:24/2001

எனது இல: ஆ/1/4/4/2
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள், உள்ளூராட்சி ,
தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு
சுதந்திர சதுக்கம், கொழும்பு.07
2001.10.16

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்

**அரச ஊழியர்களுக்கும் ஓய்வுபெற்றோருக்கும் இடைக்காலப் படியொன்றை செலுத்துதல்.**

2001 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் சகல அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியமற்ற 1200/- ரூபாவிலான மாதாந்த இடைக்கால படியொன்றை செலுத்த அரசு தீர்மானித்துள்ளது. இந்தப் படியானது 2000 செப்டெம்பர் 07 ஆந் திகதிய 15/2000 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையால் அளிக்கப்பட்டுள்ள இடைக்கால் படிக்கு மேலதிகமானதாகும்.

02. நாட்சம்பளம் பெறுகின்ற ஊழியர்களுக்கும் வேலை செய்கின்ற நாளொன்றுக்கு 57.14 ரூபாவான படியொன்றை மாதத்தின் 21 நாட்களென்ற வரையறையின் கீழ் செலுத்த வேண்டும்.

03. சகல ஓய்வு பெற்றோருக்கும் 750/- ரூபாவான மாதாந்த இடைக்கால படியொன்றை 2001 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் செலுத்த வேண்டும், இந்தப் படி 2000 செப்டெம்பர் 07 ஆந் திகதிய 15/2000 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ள இடைக்காலப் படிக்கு மேலதிகமானதாகும்.

04. மேற்குறிப்பிட்டுள்ள இடைக்காலப் படிகள் சம்பள ஆணைக்குழுவினதும் ஓய்வூதிய குழுவினதும் விதப்புரைகள் செயற்படும் வரை நடைமுறையில் இருக்கும்.

05. 2001 ஆண்டு இறுதிக் காலத்திற்காக இந்த இடைக்காலப் படியை செலுத்துவதற்கு தேவையான நிதியை எந்தவொரு மீண்டுவருஞ் செலவு விடயத்தின் கீழ் உள்ள சேமிப்புகளில் இருந்து அல்லது பொதுத் திறைசேரியின் அனுமதியுடன் செலவு விடயம் 1906 இன் கீழ் ஏற்படுத்தியுள்ள ஒதுக்கீடுகளை மாற்றிக் கொள்ளவதன் மூலம் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும், இதன்படி ஏற்பாடு செய்து கொள்ள முடிகின்ற நிதி போதாமல் இருப்பின் வேண்டிய நிலுவைத் தொகையை வழங்குவதற்கு பொதுத் திறைசேரியினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

06.. பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: எம்.என்.ஜுனைட்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள்,உள்ளூராட்சி,
தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு